செ. வெ. எண். 23 நாள் 12.01.2021.

**தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருகே செந்தலை கிராமம் அருகே தனியார் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தாரை மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம கோவிந்தராவ், இ.ஆ.ப., அவர்கள் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்**

தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருகே செந்தலை கிராமம் அருகே இன்று (12.01.2021 ) கல்லணையிலிருந்து தஞ்சாவூர் வந்த தனியார் பேருந்து மின்சாரம் தாக்கி விபத்துக்குள்ளாகியது. அதில் பயணம் செய்த 1 பெண் உட்பட 4 பேர் உயிரிழந்தனர்.

கல்லணையிலிருந்து 40 பயணிகளுடன் தஞ்சாவூர் வந்த தனியார் பேருந்து திருக்காட்டுப்பள்ளி அருகே செந்தலை என்னும் கிராமத்தில் சென்று கொண்டிருந்தபோது பின்னால் வரும் வாகனத்திற்கு வழிவிடுவதற்காக சாலையோரம் ஒதுங்கியபோது பேருந்து மின்சாரம் தாக்கி விபத்துக்குள்ளனது. இவ்விபத்தில் தஞ்சாவூர் வரகூர் கிராமம் பழைய குடியானத் தெருவைச் சேர்ந்த திருமதி கவிதா ( வயது 26 ) க/பெ. மணிகண்டன், அரியலூர் மாவட்டம், விளப்பங்குறிச்சி கிராமத்தைச் சேர்ந்த திரு. நடராஜன் ( வயது 45 ), த/பெ. தங்கப்பன், தஞ்சாவூர் கருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த திரு. கணேசன் ( வயது 35 ) த/பெ. மாரியப்பன், தஞ்சாவூர் வரகூர் அக்ரஹாரத்தைச் சேர்ந்த திரு. கல்யாணராமன் ( வயது 55 ) த/பெ. ராமாமிர்தம் ஆகிய நால்வரும் உயிரிழந்தனர்.

மேலும், பேருந்தில் பயணம் செய்தவர்களில் 3 பேர் தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

இவ்விபத்து குறித்த செய்தி அறிந்த மாவட்ட ஆட்சித் தலைவர் திரு. ம கோவிந்தராவ், இ.ஆப., அவர்கள் விபத்து நடைபெற்ற இடத்திற்கு விரைந்து சென்று பார்வையிட்டார். அதனைத் தொடர்ந்து, திருக்காட்டுப்பள்ளி அரசு மருத்துவமனையில் பேருந்து விபத்தில் உயிரிழந்தவர்களின் சடலங்களை பார்வையிட்டு, உயிரிழந்தவர்களின் குடும்பத்தாரை நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு. தேஷ்முக் சேகர் சஞ்சய், இ.கா.ப., அவர்கள், தஞ்சாவூர் வருவாய் கோட்டாட்சியர் திருமதி. வேலுமணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் திரு. ரெத்தினசாமி, திரு. எம்.ஜி.எம். சுப்ரமணியன், முன்னாள் ஒன்றியத் தலைவர் திரு. இளங்கோவன் மற்றும் பலர் உடனிருந்தனர்.

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், தஞ்சாவூர்.